

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

ஞாயிற்றுக்கிழமை 20-07-2025

# பெருந்தலைவரைப் போற்றும் கழகம்!

திராவிட இயக்கத்துக்கும் பெருந்தலைவர் காமராசருக்குமான நட்பு என்பது கொள்கை நட்பு ஆகும். பெருந்தலைவர் காமராசரை 'பச்சைத்தமிழர்' என்று போற்றியவர் தந்தை பெரியார் அவர்கள். 'உங்கள் ஆட்சிக்குக் காப்பாளனாக நான் இருப்பேன்' என்றவர் பெரியார். இராஜாஜியின் குலக்கல்வித் திட்டத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து, அனைவருக்குமான கல்விக்கு அடித்தளம் இட்டார் பெருந்தலைவர்.

குடியாத்தம் இடைத் தொகுதியில் காமராசர் அவர்கள் போட்டியிட்ட போது அவரை எதிர்த்து வேட்பாளரை நிறுத்தாதவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். அந்த வரிசையில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமையும் போதெல்லாம் பெருந்தலைவர் புகழைப் போற்றுவதை தனது கடமையாக நமது தலைவர்கள் வைத்துள்ளார்கள்.

**பெருந்தலைவர் காமராசர் அவர்களுக்கும் தலைவர் கலைஞருக்குமான நட்பு என்பது தந்தை - மகன் உறவைப் போல நெருக்கமானதாக இருந்தது. 'நெருக்கடி நிலையை எதிர்த்து நான் பதவி விலகத் தயாராக இருக்கிறேன்' என்று முதலமைச்சராக இருந்த கலைஞர் அவர்கள் சொன்னபோது, "பதவி விலகக் கூடாது, இந்தியாவில் தமிழகத்தில்தான் சுதந்திரக் காற்று வீசுகிறது" என்று சொன்னவர் பெருந்தலைவர் காமராசர் அவர்கள்.**

பெருந்தலைவர் காமராசர் அவர்கள் மறைந்த போது அவருக்கு ஒரு மகனைப் போல இறுதி நிகழ்ச்சிகளை நடத்தியவர் தலைவர் கலைஞர் அவர்கள். அரசு மரியாதையுடன் அடக்கம் செய்தது மட்டுமல்ல, அரசு இடத்தில் அவரை அடக்கம் செய்து நினைவு மண்டபம் கட்டியவர் முதலமைச்சர் கலைஞர்.

- ★ **சென்னை மாநகராட்சியை தி.மு.க. கைப்பற்றிய போதுதான் பெருந்தலைவர் காமராசருக்கு முதன்முதலாக சென்னையில் சிலை வைக்கப்பட்டது.**
- ★ **பெருந்தலைவர் காமராசர் அவர்கள் மறைந்தபோது, கடற்கரைச் சாலைக்கு அவரது பெயரை வைத்தார் முதலமைச்சர் கலைஞர்.**
- ★ **கன்னியாகுமரியில் காமராசர் மணிமண்டபம் அமைத்தவர் முதலமைச்சர் கலைஞர்.**
- ★ **நெல்லையில் பெருந்தலைவர் காமராசருக்கு சிலை அமைத்தவர் முதலமைச்சர் கலைஞர்.**
- ★ **பெருந்தலைவர் காமராசரின் செயலாளராக இருந்த வைரவனுக்கு வேலை வழங்கி அரசு வீட்டை ஒதுக்கித் தந்தவர் முதலமைச்சர் கலைஞர்.**
- ★ **பெருந்தலைவர் காமராசரின் சகோதரி நாகம்மாளுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியில் இருந்து நிதிஉதவி அளித்தவர் முதலமைச்சர் கலைஞர்.**
- ★ **பிரதமர் வி.பி.சிங் அவர்களிடம் வலியுறுத்தி சென்னை உள்நாட்டு விமான நிலையத்துக்கு பெருந்தலைவர் காமராசர் பெயரைச் சூட்டக் காரணமாக இருந்தவர் முதலமைச்சர் கலைஞர்.**
- ★ **பெருந்தலைவர் காமராசர் பிறந்த ஜூலை 15-ஆம் நாளை கல்வி வளர்ச்சி நாளாக அனைத்துக் கல்வி நிறுவனங்களிலும் கொண்டாட சட்டம் போட்டவர் முதலமைச்சர் கலைஞர்.**

"பெருந்தலைவர் காமராசர் அவர்களை ஒரு கட்சியின் தலைவராக கலைஞர் அவர்கள் பார்க்கவில்லை. ஒரு நாட்டின் தலைவராக கலைஞர் அவர்கள், காமராசரைப் போற்றி மதித்தார். இரண்டு கட்சித் தலைவர்களாக இல்லாமல், இரண்டு கொள்கைகளின் தலைவர்களாக அவர்கள் இருந்தார்கள்" என்று இன்றைய முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள்.

இன்றைய முதலமைச்சர் அவர்கள், தனது வாழ்வில் பெருமைக்குரிய நிகழ்வு என்பது, தனது திருமணத்துக்குப் பெருந்தலைவர் காமராசர் வருகை தந்தது என்பதை எப்போதும் மறக்காமல் சொல்வார்கள். பெருந்தலைவர் உடல் நலிவுற்றிருந்த நேரம் அது. எனவே, அவரது வருகைக்காக மேடையை மாற்றி அமைத்து, அவரை அழைத்து வந்தார் தலைவர் கலைஞர் அவர்கள். இதனைப் பல கூட்டங்களில் இன்றைய முதலமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். கலைஞரின் வழித்தடத்தில் இன்றைய முதலமைச்சர் அவர்களும் பெருந்தலைவரைப் போற்றி வருகிறார்.

சென்னையில் மாபெரும் நூலகத்தை அமைத்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அதற்கு, 'பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நூலகம்' என்று பெயர் சூட்டினார்கள். மதுரையில் மாபெரும் நூலகத்தை அமைத்த மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் அதற்கு, 'கலைஞர் நூற்றாண்டு நூலகம்' என்று பெயர் சூட்டினார்கள். கோவையில் அமைய இருக்கும் நூலகத்துக்கு 'தந்தை பெரியார் நூலகம்' என்று பெயர் சூட்டப்படும் என்று அறிவித்துள்ளார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். இதைத் தொடர்ந்து திருச்சியில் அமைய இருக்கும் நூலகத்துக்கு 'பெருந்தலைவர் காமராசர்' பெயர் சூட்டப்படும் என்று அறிவித்திருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

ரூபாய் 1000 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்பட்ட கல்லூரிக் கல்வி மேம்பாட்டுத் திட்டத்துக்கு, பெருந்தலைவர் காமராசர் பெயரைச் சூட்டினார் முதலமைச்சர் அவர்கள்.

கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலைக்கு மூன்று படகுகள் விடப்படும் என்று அறிவித்தார் முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள். அதில் ஒரு படகுக்கு பெருந்தலைவர் காமராசர் பெயர் சூட்டப்படும் என்று அறிவித்தார்கள். (ஐரோப்பியத் தமிழறிஞர் ஜி.யு.போப், தென் தமிழகப் போராட்ட வீரர் மார்ஷல் நேசமணி)

கன்னியாகுமரி கடற்கரையில் அமைந்துள்ள காந்தியடிகள் நினைவு மண்டபமும், பெருந்தலைவர் காமராசர் நினைவு மண்டபமும் ரூபாய் 75 இலட்சம் செலவில் சீரமைக்கப்பட உள்ளன.

அரசுப் பள்ளி மாணவர்களுக்கான காலை உணவுத் திட்டத்தை தலைவர் கலைஞர் பிறந்த திருவாரூரில் தொடங்கி வைத்தார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். அரசு உதவி பெறும் பள்ளிப் பிள்ளைகளுக்கான காலை உணவுத் திட்டத்தை பெருந்தலைவர் காமராசர் பிறந்த ஜூலை 15ஆம் நாள் திருவள்ளூரில் தொடங்கி வைத்தார் முதலமைச்சர் அவர்கள்.

இப்படி காலங்கள்தோறும் பெருந்தலைவரைப் போற்றும் அரசாக திராவிட முன்னேற்றக் கழக அரசு செயல்பட்டு வருகிறது.

●●

## சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதில் மிகுந்த அக்கறையோடு — மக்களிடம் காவல்துறையினர் கனிவாக நடந்து

# நேர்மையான சேவையை விரைந்து வழங்க வேண்டும்!

### காவல் துணை கண்காணிப்பாளர்களின் பயிற்சி நிறைவு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டுரை!








சென்னை, ஊனமாஞ்சேரி, தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்தில் நேற்று முன்தினம் (18.7.2025) நடைபெற்ற காவல் துணை கண்காணிப்பாளர்களின் பயிற்சி நிறைவு அணிவகுப்பு விழாவில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொலி வாயிலாக உரையாற்றினார். இவ்விழாவில், காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், காவல்துறை இயக்குநர், பயிற்சி (பொறுப்பு) மற்றும் தமிழ்நாடு காவல் உயர்பயிற்சியகத்தின் இயக்குநர் சந்தீப் ராய் ராத்தோர், தமிழ்நாடு காவல் உயர்பயிற்சியகத்தின் கூடுதல் இயக்குநர் திருமதி. பி.சி. பி.சி. தேன்மொழி. துணை இயக்குநர் (பயிற்சி) து.பெ. சுரேஷ்குமார், துணை இயக்குநர் (நிர்வாகம்) முனைவர் த. செந்தில் குமார் மற்றும் காவல்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**சென்னை, ஜூலை 20-**

**சென்னை, ஊனமாஞ்சேரி, தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்தில் நேற்று முன்தினம் (18.7.2025) நடைபெற்ற காவல் துணை கண்காணிப்பாளர்களின் பயிற்சி நிறைவு அணிவகுப்பு விழாவில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொலி வாயிலாக ஆற்றிய உரை வருமாறு:-**

காவல்துறைக்கு நேரடி காவல் துணை கண்காணிப்பாளராக தேர்வு செய்யப்பட்டு, கழக அரசால் பணி நியமன ஆணை வழங்கப்பட்டு, ஓராண்டு சிறப்பான பயிற்சியை முடித்து, இன்று உடல் வலிமை, மன உறுதி மிக்கவர்களாக நீங்கள் களத்துக்குச் செல்லப் போகிறீர்கள் என்பது பெருமைக்குரிய நிகழ்வு.

**பயிற்சி முடித்து பணியில் இணைவோருக்கு வாழ்த்துகள்!**

வலுவான அடிப்படை பயிற்சியை முடித்து, ஒன்பது பெண் அதிகாரிகள் உட்பட 24 காவல் துணைக் கண்காணிப்பாளர்களும் தங்களுடைய பணியிலும், வாழ்விலும், ஒளிமயமான ஏற்றத்தை கண்டிட மனமார்ந்த வாழ்த்துகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவல் அதிகாரிகள் உயர்தரமான பயிற்சியை பெறவேண்டும் என்ற நோக்கத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 2008ல் 129 ஏக்கர் பரப்பளவில், இந்த பரந்து விரிந்த தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்தைத் தொடங்கி வைத்தார்.

இங்கே பலவகை சட்டப்பயிற்சி, புலனாய்வு நுணுக்கம், கணினிசார் குற்றங்களைத் தடுக்கின்ற சிறப்புப் பயிற்சி, உளவியல் பயிற்சி, பொருளாதார குற்றங்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை சிறப்பாக புலனாய்வு செய்கின்ற திறன், ஆயுதப் பயிற்சி போன்ற அனைத்து வகையான பயிற்சிகளையும் பெற்று, எந்த சவால்களையும் எதிர்கொள்ளுகின்ற திறனுடன் நீங்கள் களத்துக்குச் செல்வது பெருமைமிக்க தருணம். இந்த காவல் உயர் பயிற்சியகத்தில் இதுவரை 5 ஆயிரத்து 55 நேரடி உதவி ஆய்வாளர்களுக்கும், 297 காவல்துறை கண்காணிப்பாளர்களுக்கும் அடிப்படையான பயிற்சிகள் அளிக்கப்பட்டிருக்கிறது.

> **"உயர் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்த வேண்டும். அதில் நீங்கள் எல்லாம் அப்டேட்ஆகிக் கொள்ள வேண்டும். நீங்கள் ஒவ்வொருவரும் அறிவியல் சார்ந்த விசாரணை நடைமுறைகளில் அதிகம் கவனம் செலுத்த வேண்டும்."**

**அறிவியல் சார்ந்த விசாரணை நடைமுறை வேண்டும்!**

மேலும், கடந்த வாரம் 2 ஆயிரத்து 452 காவலர்கள், அடிப்படைப் பயிற்சியை முடித்து காவல் பணியில் சேர்ந்திருக்கிறார்கள் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவல் பணி என்பது மக்கள் பிரச்சினைகளை நேரடியாக தீர்த்து வைக்கின்ற மிக உன்னதமான பணி. ஒவ்வொருவரும் பொதுமக்களிடம் கனிவாக, மரியாதையாக நடந்து, அவர்களுடைய குறைகளை பொறுமையாக கேட்க வேண்டும். அவர்களுக்கு நியாயமான, நேர்மையான சேவையை விரைந்து வழங்கவேண்டும்.

உயர் தொழில்நுட்பங்களை பயன்படுத்த வேண்டும். அதில் நீங்கள் எல்லாம் அப்டேட்டாகிக் கொள்ள வேண்டும். நீங்கள் ஒவ்வொருவரும் அறிவியல் சார்ந்த விசாரணை நடைமுறைகளில் அதிகம் கவனம் செலுத்த வேண்டும்.

**எப்போதும் பணியில் ஃபிட்டாக இருக்க வேண்டும்!**

ஃபீல்டுக்கு செல்கின்ற இந்த நேரத்தில், எப்படி ஃபிட்டாக இருக்கிறீர்களோ, அதே போல, நீங்கள் எப்போதும் ஃபிட்டாக இருக்கவேண்டும். பணிச்சுமைகளுக்கு இடையில், நீங்கள் உங்கள் உடல்நலத்தையும் பார்த்துக் கொள்ளவேண்டும். குடும்பத்துடன் நேரம் செலவிட வேண்டும். காவல் துறையில் சிறப்பாக, நேர்மையாக பணியாற்றி, நீங்கள் மேலும், மேலும் பதவி உயர்வுகளைப் பெற்று, மக்கள் சேவையில் சிறந்து விளங்க வாழ்த்துகிறேன்!

நான் மீண்டும் உங்களை சந்திக்கும் போது, ஃபீல்டுக்குச் செல்லும்போது, நீங்கள் வழங்கிய ஆலோசனைகளின் பேரில், சிறப்பாக மக்கள் பணியாற்றுகின்றோம் என்று நீங்கள் ஒவ்வொருவரும் சொன்னால், அதுவே எனக்கு மிகப் பெரிய மகிழ்ச்சி.

தமிழ்நாட்டு மக்களுக்கு துணையாகவும், சட்டம், ஒழுங்கு நிலைநாட்டுவதில், மிகுந்த அக்கறையோடும் நீங்கள் அனைவரும் திட்ட மிட்டு, திறம்பட செயல்பட வேண்டும் என்று வாழ்த்தி, விடை பெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று முன்தினம் (18.07.2025) தமிழ்நாடு மாநில காங்கிரஸ் கட்சித் தலைவர் கு.செல்வப்பெருந்தகை எம்.எல்.ஏ., சந்தித்துப் பேசினார். உடன் கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி., உள்ளார்.